


dinakani2023@gmail.com


RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 305 | 4 Pages | 31.5.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 305 | 4 பக்கங்கள் | 31.5.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்**
**இல்லதனின் தீய பிற**

**விளக்கம்:** பலிக்காத இடத்தில் (தன்னை விட வலியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு. பலிக்கும் இடத்திலும் (மெலியவரித்திலும்) சினத்தைவிடத் தீயவை வேறு இல்லை.

## ராணுவ விமானம் தரையில் விழுந்து விபத்து 4 வீரர்கள் உயிரிழப்பு

சியோல், மே.31

கொரியா தீபகற்பத்தில் அமைந்துள்ள நாடுகளாக தென்கொரியா மற்றும் வடகொரியா உள்ளது. உலக நாடுகளின் கண்டனங்கள், எதிர்ப்புகள் எதையும் கண்டு கொள்ளாமல், தொடர்ந்து அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடத்தி வருகிறது.

ஒரு பக்கம் வடகொரியா உடன் தரைப்பரப்பில் எல்லையை தென்கொரியா பகிர்ந்து கொண்டுள்ளது. மற்ற 3 பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள தென் கொரியா, வடகொரியாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ராணுவ அளவில் பல் வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.


அந்தவகையில் தங்களுடைய கடல் பரப்பை எதிரிநாடான வடகொரியாவிடம் இருந்து பாதுகாப்பதற்காக முப்படைகளை சேர்ந்த போர் விமானங்கள், கண்காணிப்பு விமானங்கள் ரோந்து சுற்றி வருகின்றன. தென்கொரியாவின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள போகாங் மாகாணம் கடல் பரப்பை ஒட்டி அமைந்துள்ளது. இந்த மாகாணத்தின் கடல் பரப்பிலும் அந்த நாட்டின் ராணுவ விமானங்கள் தொடர்ந்து ரோந்துப்பணி மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையில் அங்கு கடல் பரப்பின்மேல் பறந்தபடி கடற்படைக்கு சொந்தமான ராணுவ விமானம் ஒன்று ரோந்து மேற்கொண்டது. அந்த விமானத்தில் ராணுவ உயர் அதிகாரி உள்பட 4 ராணுவ வீரர்கள் இருந்தனர்.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அந்த விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து கண்காணிப்பு அறை உடனான தொடர்பை இழந்து வானில் இருந்து வட்டமடித்தபடி அங்குள்ள அங்குள் கடற்கரை கிராமத்தின் அருகே தரையில் மோதி விழுந்தது.

மோதிய வேகத்தில் அந்த விமானம் தீப்பிடித்து முழுவதுமாக கருகி எலும்புக்கூடானது. இந்த கொடூர விபத்தில் விமானத்தில் இருந்த 4 ராணுவ வீரர்களும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த மீட்புத்துறையினர், ராணுவ உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தொடர்ந்து அங்கு மீட்புப்பணி மேற்கொண்டு விமானத்தின் கருப்பு பெட்டியை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## பாகிஸ்தானில் திடீர் நிலநடுக்கம் ரிக்டரில் 4.2 ஆக பதிவு




இஸ்லாமாபாத், மே.31

பாகிஸ்தானில் இன்று மதியம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. மதியம் 1.37 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

180 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 32.57 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 62.89 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

முன்னதாக பாகிஸ்தானில் நேற்று மாலை ரிக்டரில் 4.4 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது

## அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் பரஸ்பர வரிக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்



வாஷிங்டன், மே.31

உலக நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்கள் பரஸ்பர வரி விதித்தும், கனடா, மெக்சிகோ, சீனா ஆகிய நாடுகளுக்கு கூடுதல் இறக்குமதி வரி விதித்தும், ஏராளமான நாடுகளின் பொருள்களுக்கு கூடுதலாக 10 சதவீத அடிப்படை வரி விதித்தும் ஜனாதிபதி டிரம்ப் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவுக்கு எதிராக எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் ஆட்சி நடைபெறும் 12 மாகாணங்கள் நியூயார்க் நகரிலுள்ள சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தன.இதனை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, டிரம்ப் பிறப்பித்துள்ள உத்தரவுகள் அவரின் அதிகார மீறலாகும் என்று விமர்சித்து, அனைத்து உத்தரவுகளும் நிரந்தரமாக ரத்து செய்யப்படுவதாக தெரிவித்தனர். இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்க அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் நேற்று முறையிடப்பட்டது.

வரி விதிப்பு விவகாரத்தில் வர்த்தக நீதிமன்றத்தின் தடைக்கு அவசர நிவாரணம் வழங்க வேண்டும் என்ற அரசின் முறையீட்டை அந்நாட்டு சுப்ரீம் கோர்ட்டு ஏற்றுக்கொண்டது.மேலும், வரி விதிப்பை நிறுத்திவைப்பது தேசிய பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் எனத் தெரிவித்த அந்நாட்டு சுப்ரீம் கோர்ட்டு, தற்காலிகமாக வரி விதிப்பு நடவடிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளனர். மேலும், இந்த வழக்குகளில் உள்ள வாதங்களுக்கு ஜூன் 5 ஆம் தேதிக்குள் பதிலளிக்கவும், நிர்வாகம் ஜூன் 9 ஆம் தேதிக்குள் பதிலளிக்கவும் உத்தரவிட்டது.

# தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திராவிட மாடலைப் பின்பற்றினால் உற்பத்தி துறையில் இந்தியா புரட்சியை உண்டாக்கும்: முதல்வர்

சென்னை

உற்பத்தி துறையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு படைத்து வரும் சாதனைகளை விவரித்து, பாராட்டியுள்ளது தமிழ்நாடு அரசு.

இது குறித்து, தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பு பின்வருமாறு,

2014ல் 'Make in India' திட்டம் தொடங்கப்பட்டபோது, 2025க்குள் உற்பத்தித் துறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 25% ஆக உயர்த்துவதை இலக்காக நிர்ணயம் செய்தது. ஆனால் தற்போது வரை 16% சதவீதம் எட்டப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாடு மட்டும் தன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 25% உற்பத்தித் துறையிலிருந்து பெற்று நாட்டிற்கே வழிகாட்டும் மாநிலமாக உள்ளது.

உலகத் தரத்தில் உற்பத்தி மையம் தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான், பெகாட்ரான், சாம்சங், ஹுண்டாய், ஃபோர்ட், நிஸான், டிவிஎஸ் மோட்டார் நிறுவனம், அசோக் லேலண்ட் போன்ற உலகளாவிய பெருநிறுவனங்களின் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

உலகளவில் புகழ்பெற்ற ஆப்பிள்(Apple) போன்களை தயாரிக்கும் நிறுவனங்களில் 50,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பல லட்சக்கணக்கான ஐபோன்களை உற்பத்தி செய்கின்றனர். அதேபோல், நைக் (Nike) நிறுவனத்திற்கான பொருள்களைத் தயாரித்து வழங்குவதில் முதன்மை நிறுவனமாக இருக்கும் ஃபெங் டே (Feng Tay) நிறுவனம் 37,000 பணியாளர்களுடன் பல தொழிற்சாலைகளை இயக்குகிறது.

தமிழ்நாட்டில் மொத்தமாக 31,000க்கும் மேற்பட்ட செயல்பாட்டில் உள்ள தொழிற்சாலைகள் உள்ளன, இதுதான் இந்தியாவில் அதிகமான எண்ணிக்கை ஆகும்.

இந்தியாவிலேயே ஏற்றுமதியில் முன்னணியில் நிற்கும் தமிழ்நாடு. தமிழ்நாடு ஆடைகள், வாகன உற்பத்தி, பொறியியல் பொருட்கள் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதுல் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக உயர்ந்துள்ளது.




திராவிட மாடலைப் பின்பற்றினால் உற்பத்தி துறையில் இந்தியா புரட்சியை உண்டாக்கும்! : தமிழ்நாடு அரசு!

இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6% க்கும் குறைவாக இருந்தாலும், எண்ணெய் அல்லாத பொருட்களில்ன் ஏற்றுமதியில் 15% பங்கைத் தமிழ்நாடு வகிக்கிறது.

இந்தியாவின் 41% மின்னணு சாதனப் பொருட்கள், 38% காலணிகள் மற்றும் 45% வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தமிழ்நாட்டில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் உற்பத்தி துறையின் சிறப்பான வளர்ச்சியினால் இந்தியாவில் 9.69 விழுக்காடு மாநில உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தி நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் வெற்றிக்கான முக்கிய காரணிகள் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறைக் கிளஸ்டர்கள் இந்த சாதனைகள் ஓரிரவில் நடந்தது அல்ல. மாநில அரசு தொடர்ந்து துறைமுகங்கள் (சென்னை, தூத்துக்குடி போன்றவை), சாலை வலையமைப்புகள் மற்றும் தொழிற்துறை நிலங்களில் முதலீடு செய்துள்ளது.

1971ஆம் ஆண்டு திமுக அரசால் நிறுவப்பட்ட SIPCOT (தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம்) தொழிற்பூங்காக்களை உருவாக்கி, தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை உற்பத்திதுறை தேசிய அளவில் பிரபலமாகும் முன்பே உயர்த்தியிருந்தது.

இதனால், முதலீட்டாளர்கள் வருவதற்கு முன்பே அவர்களுக்கான நிலம் மற்றும் அடிப்படை வசதிகள் தயாராக இருந்தன. கோயம்புத்தூர் (பொறியியல் பொருட்கள்), சென்னை (வாகனங்க), திருப்பூர் (துணிகள்) போன்ற நகரங்கள் சிறப்புத் துறை மையங்களாக உருவெடுத்தன.

முதலீட்டாளர்களுக்கு அரசின் ஆதரவு தமிழ்நாடு அரசின் Guidance TamilNadu என்பது ஒரு முழுச்சேவை முதலீட்டு மையமாகும். பல மாநிலங்களில் "ஒற்றை சாளர அனுமதி", "முதலீட்டாளர் மாநாடுகள்" என்பவை வெறும் பிரசாரமாக இருந்தாலும், தமிழ்நாடு நடைமுறையில் இதை செயல்படுத்துகிறது.

'Guidance Tamil Nadu' நிறுவனங்களுக்கு நிலம், அனுமதிகள், தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் அன்றாட செயல்பாட்டு சிக்கல்களுக்கு உதவுகிறது. இந்த விரைவான மற்றும் திறமையான அணுகுமுறை, முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது.

செயல்திறன் மிக்க அரசு நிர்வாகம் மற்றும் அரசு அதிகாரிகள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசும் அரசுப் பணியாளர்களும் தடையாக இல்லாமல், விரைவான தீர்வுகளை வழங்குகின்றனர்.

ஒன்றிய அரசு மின்னணு சாதனங்களின் உதிரிபாகங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டத்தை அறிவித்தபோது, தமிழ்நாடு ஒரு வாரத்திற்குள் தனது திட்டத்தை அறிவித்து, மின்னணு சாதனங்களின் ஏற்றுமதியை தற்போது உள்ள $14 பில்லியனிலிருந்து $100 பில்லியனாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தது.

மேலும், அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமை தொழிலாளர் பிரச்சினைகளுக்கு சமரச தீர்வுகளை வழங்குகிறது. எடுத்துக்காட்டாக, சாம்சங் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் ஏற்பட்டபோது, அரசு தலையிட்டு விரைவாகத் தீர்வு கண்டது அரசின் செயலூக்கமுள்ள நடைமுறையை காட்டுகிறது தமிழ்நாடு 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடே இந்தியாவில் உற்பத்திதுறையில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழிக்காட்டும் மாநிலமாக இருக்கிறது. ஆந்திரா, தெலுங்கானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் தங்களுக்கிடையேடான போட்டியில், தமிழ்நாட்டின் வெற்றிப் பாடங்களைப் பின்பற்றினால், இந்தியா விரைவில் உற்பத்தித் துறையில் உலகளாவிய சக்தியாக உருவெடுக்கும்.

## ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டின் முன் நகைக்கடை அதிபர் மற்றும் மன வளர்ச்சி குன்றிய இரண்டு நபர்கள் தர்ணா

தாராபுரம் ,மே. 30

தாராபுரம் பெரிய கடை வீதியில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர் ரவிச்சந்திரன் இவரது அண்ணன்கள் மன வளர்ச்சி குன்றிய சக்தி மற்றும் ராஜாராம் இவர்களின் பூர்வீக சொத்து கொட்டாபுளி பாளையம் பகுதியில் உள்ளது இவரது பூமியை திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் வாகரை பகுதியைச் சேர்ந்த ஸ்டாலின் என்பவர் தாராபுரத்தில் ஹவுசிங் போர்டு பகுதியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் இவரும் இவரது பங்குதாரர் பண்ணாரி அம்மன் மோட்டார்ஸ் சுகுமார் இருவரும் சேர்ந்து ரவிச்சந்திரன் பூர்விகா சொத்தை விலைக்கு வாங்கிய வகையில் ரூபாய் 40 லட்சம் பணத்தை தர வேண்டியதை கேட்டும் மற்றும் அவர் கிரையை உடன்படிக்கை செய்து கொடுத்த 63 செண்ட் இடத்தை ஒப்பந்தத்தை ரத்து செய்த கோரியும் ஏற்கனவே நான்கு வருடங்களாக கேட்டும் பணத்தை தராமல் காலதாமத படுத்தி வருவதால் இதுகுறித்து திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு அளித்து வந்த நிலையில் இன்று காலை தாராபுரம் புதிய ஹவுசிங் போர்டு பகுதியில் உள்ள ஸ்டாலின் வீட்டு முன்பு ரவிச்சந்திரன் மற்றும் அவரது அண்ணன்கள் தர்ணாவில் ஈடுபட்டனர் இதனால் அப்பகுதியில் பரபரப்பாக காணப்பட்டது





மழைகாலத்தில் சாலைகளில் ஓடும் பெருமழை வெள்ளத்தை அடையாறு ஆற்றில் கொண்டு சேர்க்கும் பல இடங்களில் உடைந்த சுவர்களோடு அபாயகரமாக உள்ள #138வது_வார்டு எம்ஜிஆர் கால்வாயை மாநகராட்சி மன்றத்தில் நான் ( பகுதி செயலாளர், 138வது வார்டு கவுன்சிலர் #கே_கண்ணன்) பேசி, மேயர், துணை மேயர், மாநகராட்சி கமிஷனர், துணை ஆணையர்கள் துணையோடு, புதிதாக சீரமைக்க, டெண்டர் விடபட்ட எம்ஜிஆர் கால்வாயை ★நானும், 10வது மண்டல அலுவலர் திரு. முருகேசன், EE திரு இனியன், AEE திரு ரங்கநாதன் ஆகியோருடன் கால்வாய் பகுதி உள்ளே சென்று ஆய்வு செய்து, உடைந்த பகுதி சுவர்களை புதிதாக கட்டவும் கரையை உயர்த்தவும் ஆலோசனை வழங்கினோம்.

## தூத்துக்குடி: பூட்டிய வீட்டுக்குள் சிக்கிய 3 வயது சிறுவன்

தூத்துக்குடி, மே.31

தூத்துக்குடி கே.வி.கே. நகர் மேற்கு பகுதியைச் சேர்ந்தவர் தாதா பீர். ஆயுதப்படை போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார். இன்று காலையில் தாதா பீர் பணிக்கு சென்று விட்டார். வீட்டில் அவரது மனைவி, 3வயது மகன் இருந்துள்ளனர். அவரது மனைவி வீட்டு வேலைகளை செய்துகொண்டிருந்த நிலையில், 3 வயது சிறுவன் வீட்டிற்குள் விளையாடிக் கொண்டு இருந்துள்ளான்.



எதிர்பாராதவிதமாக வீட்டின் உள்அறைக்குள் சென்ற விளையாடிய சிறுவன் கதவை உள்பக்கமாக பூட்டி உள்ளான். பிறகு அந்த சிறுவனால் கதவை திறக்க முடியவில்லை. இதனால் சிறுவன் அறைக்குள் கதறி அழுது உள்ளான். அவனது அழுகுரல் கேட்ட தாயார் மற்றும் அக்கம்பக்கத்தினர் சிறுவனை மீட்க முயன்றனர். ஆனால் கதவை திறக்க முடியவில்லை. பதறிப் போன சிறுவனின் தாயார் மற்றும் அக்கம் பக்கத்தினர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

இதை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட உதவி தீயணைப்பு அலுவலர் நட்டார் ஆனந்தி தலைமையிலான தீயணைப்பு படை வீரர்கள் அந்த வீட்டிற்கு விரைந்து சென்றனர். பின்னர் அந்த வீட்டின் கதவை உடைத்து சிறுவனை பத்திரமாக மீட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.



# சேலம்கரூர்திண்டுக்கல் இருவழி ரெயில்பாதை திட்டத்திற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு




சென்னை, மே.31

மத்திய அரசின் 2025 2026ம் ஆண்டிற்கான பொது பட்ஜெட் கடந்த பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில், ரெயில்வே துறைக்கு ரூ.2.65 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டது. இவற்றில் தெற்கு ரெயில்வேயில் தமிழகத்தில் உள்ள சென்னை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய 4 கோட்டங்களில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ள ரூ.6,626 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புதிய வழித்தடம், இருவழிப்பாதை, ரெயில் நிலையம் மேம்பாடு போன்ற பணிகள் செய்யப்பட உள்ளது.

அந்த வகையில், சேலம் ரெயில்வே கோட்டத்தை பொறுத்தவரையில் மொரப்பூர்தர்மபுரி அகல ரெயில்பாதை திட்டம், ஈரோடுபழனி அகல ரெயில்பாதை திட்டம், சேலம்கரூர்திண்டுக்கல் இருவழிப்பாதை திட்டம் போன்றவை நிலுவையில் உள்ளது.

இவற்றில் சேலம்கரூர் திண்டுக்கல் இடையே 160 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருவழிப்பாதை அமைக்க கடந்த 2020ம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் திட்ட அனுமதி வழங்கப்பட்ட நிலையிலேயே அத்திட்டப்பணி கடந்த 4 ஆண்டுகளாக கிடப்பில் கிடக்கிறது.

சேலம்கரூர்திண்டுக்கல் இருவழி ரெயில்பாதை திட்டத்தை ரூ.1,600 கோடியில் நிறைவேற்றலாம் என திட்ட மதிப்பீடு தயார் செய்திருந்த நிலையில், தற்போது அதன் திட்ட மதிப்பு சுமார் ரூ.2 ஆயிரம் கோடி என்ற நிலைக்கு வந்திருக்கிறது. நடப்பாண்டில் தான் சேலம்கரூர்திண்டுக்கல் இருவழிப்பாதை திட்டத்திற்கு ரூ.100 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர். இந்த நிதியை வைத்து ஆரம்பகட்ட பணிகளை ரெயில்வே நிர்வாகம் துரிதமாக தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம்கரூர் புதிய அகல ரெயில்பாதை அமைக்கும்போதே இருவழிப்பாதைக்கு தேவையான அளவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. அதனால் புதிதாக எங்கேயும் நிலம் எடுக்கவேண்டியதில்லை. ஏற்கனவே அமைந்துள்ள பாதை அருகில் மற்றொரு பாதையை அமைத்திடவே இத்திட்டம் போடப்பட்டு உள்ளது. அதனால் அடுத்து வரும் ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்தால் மிக விரைவில் பணிகள் நிறைவடைந்து இருவழிப்பாதை பயன்பாட்டிற்கு வரும் என ரெயில் பயணிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# போதையில்லா தமிழ்நாடு கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் அதிகாரிகள் முன்னிலையில் அழிப்பு




சென்னை, மே.31

'போதையில்லா தமிழ்நாடு' முயற்சியின் ஒரு பகுதியாக, பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள்மற்றும் மனமயக்கப்பொருட்களை அழிக்கும் பணி, தமிழ்நாடு போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு மூலம் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி இன்று 30.05.2025, சுமார் ரூ.4 கோடி மதிப்புள்ள 112 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 3510.68 கி.கி. உலர் கஞ்சா, 0.860 கி.கி. மெத்தம்பேட்டமைன், 239.600 கி.கி கஞ்சா சாக்லெட் போன்ற போதைப் பொருட்கள் அனைத்து சட்ட முறைகளையும் பின்பற்றி செங்கல்பட்டு மாவட்டம் தென்மேல்பாக்கத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட எரிக்கும் ஆலையில் எரிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில்

இதுநாள் வரை 355 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 7139.387 கி.கி. உலர் கஞ்சா, 74.150 கி.கி ஹசிஷ், 58 கி.கி. சாராஸ், 1 கி.கி ஹெராயின், 241 கி.கி கஞ்சா சாக்லெட்கள், 0.860 கி.கி. மெத்தம்பேட்டமைன், ஆகியவை போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவினரால் எரிக்கப்பட்டது.

போதைப்பொருள்கள் மற்றும் போதைப்பொருள்களின் சட்டவிரோத விற்பனை மற்றும் கடத்தல்

தொடர்பான தகவல்களை கட்டணமில்லா தொலைபேசி உதவி எண். 10581 மூலம் மற்றும் வாட்ஸ் அப் எண். 9498410581 அல்லது மின்னஞ்சல் முகவரி spnibcid@gmail.com மூலம் பகிருமாறு பொதுமக்களிடம் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

# தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு; அரசின் டெண்டரை எதிர்த்து ஐகோர்ட்டில் வழக்கு



சென்னை, மே.31

தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு விதிகளை அமல்படுத்தும் வகையில் கோரப்பட்ட டெண்டருக்கு தடை விதிக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த மனுவில், விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு விதிகளை எதிர்த்து தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சட்டத்திற்கு விரோதமாக அரசு டெண்டர் கோரியுள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த நிலையில், மனு தொடர்பாக வரும்ஜூன்20ந்தேதிக்குள் மத்திய, மாநில விலங்குகள் நல வாரியம் மற்றும் கால்நடை துறை பதிலளிக்க வேண்டும் என சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

# வசந்தோற்சவம்: தங்க குதிரை வாகனத்தில் வீதி உலா வந்த காஞ்சி வரதராஜ பெருமாள்



காஞ்சிபுரம், மே.31

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் கோடை உற்சவத்தை குறிக்கும் வகையில் வசந்த உற்சவ விழா நடைபெற்று வருகிறது. விழாவின் ஏழாம் நாளான இன்று வசந்த மண்டபத்தில் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் எழுந்தருளிய வரதராஜ பெருமாளுக்கு மஞ்சள், சந்தனம், துளசி, உள்ளிட்டவைகள்வைத்து வேதப்பாராயண கோஷ்டியினர் வேத மந்திரங்களை ஒலிக்க சிறப்பு திருமஞ்சனம் நடத்தப்பட்டது. பின்னர் சுவாமிக்கு வெண்பட்டு உடுத்தி, கோடாலி சவுரி கொண்டை, மல்லிகை பூ, செண்பகப்பூ, மனோரஞ்சித பூ, பஞ்சவர்ண மலர் மாலைகள் அணிவித்து சிறப்பு தூப, தீப ஆராதனை செய்யப்பட்டது.

வசந்த மண்டபத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட வரதராஜப் பெருமாளை தங்க குதிரை வாகனத்தில் எழுந்தருள செய்து, பின்னர் மேளதாள வாத்தியங்கள் முழங்க, வேதபாராயண கோஷ்டியினர் பாடிவர, சன்னதி வீதி நான்கு மாட வீதியில் வீதி உலா வர செய்தனர். அப்போது வீதியில் திரண்டிருந்த பக்தர்கள் கற்பூர ஆரத்தி எடுத்து சுவாமி தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து கோவிலுக்கு திரும்பிய வரதராஜ பெருமாள் அனந்தசரஸ் திருக்குளம் அருகே எழுந்தருளியதை தொடர்ந்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன.

அதன்பின்னர் திருக்குளத்தில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# எடப்பாடி பழனிசாமியுடன் எல்.கே.சுதீஷ் சந்திப்பு



சென்னை, மே.31

தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மாநிலங்களவை எம்.பி.க்களாக ம.தி.மு.க.வை சேர்ந்த வைகோ, தி.மு.க.வை சேர்ந்த வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ், அ.தி.மு.க.வின் சந்திரசேகர் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் வருகிற ஜூலை மாதம் முடிகிறது.

எனவே அதற்கான தேர்தல், வருகிற 19ந்தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் ஒரு எம்.பி. வெற்றி பெற வேண்டுமென்றால் 34 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தேவை. அந்த அடிப்படையில் தி.மு.க.விற்கு 4ம், அ.தி.மு.க.விற்கு 2 இடங்களும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

அதன்படி தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களாக வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகிய 3 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள ஒரு இடம், மக்கள் நீதி மய்யத்திற்கு தி.மு.க. ஒதுக்கி உள்ளது. அதில் கமல்ஹாசன் போட்டியிடுவார் என்றும் அந்த கட்சி அறிவித்துள்ளது. எனவே இந்த முறை வைகோவிற்கு எம்.பி. பதவி கிடைக்கவில்லை.

மேலும் அ.தி.மு.க. சார்பாக மாநிலங்களவை எம்.பி. வேட்பாளர்கள் யார்? என்று இன்னும் அறிவிக்கப்படவில்லை. வேட்பாளர்களை அறிவிப்பதில் அ.தி.மு.க. தொடர்ந்து மவுனம் காத்து வருகிறது. அதேநேரம் தங்களுக்கு ஒரு இடம் வேண்டும் என்று கேட்டு தே.மு.தி.க.வும், பா.ம.க.வும் நெருக்கடி கொடுத்து வருகின்றன. வேட்பாளர்கள் தேர்வு குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாக அந்த கட்சியினர் கூறுகின்றனர்.

இந்த நிலையில், மாநிலங்களவை இடம் வழங்க வேண்டும் என அதிமுகவிடம் தேமுதிக கேட்டு வரும் நிலையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் சந்தித்து பேசி வருகிறார். சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. மாநிலங்களவை எம்.பி சீட் வழங்குவது தொடர்பாக அதிமுக தேமுதிக இடையே பிரச்சினை நீடித்து வரும் நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# தமிழகத்தின் 2 மாவட்ட அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க அரசு உத்தரவு



சென்னை, மே.31

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

★ தேனி மாவட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கு இரு போக ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக பாசனத்திற்காக பெரியாறு அணையிலிருந்து வினாடிக்கு 200 கனஅடி வீதமும், தேனி மாவட்டகுடிநீர்தேவைக்காக வினாடிக்கு 100 கன அடி தண்ணீரையும் சேர்த்து வினாடிக்கு 300 கனஅடி தண்ணீரை 120 நாட்களுக்கு தேவைக்கேற்ப 01.06.2025 முதல் நீர்இருப்பைப் பொறுத்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தேனி மாவட்டம், உத்தமபாளையம், தேனி மற்றும் போடிநாயக்கனூர்தாலுக்காக்களில் உள்ள 14,707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்திற்கு பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் 1 மற்றும் 2 அணைகளிலிருந்து 01.06.2025 முதல் 28.02.2026 வரை வினாடிக்கு 850 கன அடி வீதம் தேவைக்கேற்பதண்ணீர்இருப்பை பொறுத்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கல்குளம் வட்டம், கிள்ளியூர் வட்டம், திருவட்டார் வட்டம், விளவங்கோடு வட்டம் மற்றும் அதனைச் சார்ந்த கிராமங்களில் உள்ள 79,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சியில் புகையிலை பொருட்கள் விற்ற 3 பேர் கைது

திருச்சி, மே.31

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் சப்இன்ஸ்பெக்டர்அருண்குமாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் திருவெறும்பூர் அருகே காட்டூர் பகுதியில் உள்ள ஒரு கடையில் போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்றதாக அரியமங்கலம் மலையப்பநகரை சேர்ந்த மனோகர் (வயது 70),

திருவானைக்கோவில் நடு கொண்டையம் பேட்டை கரிகாலன் தெருவை சேர்ந்த ஆறுமுகம் மகன் காவியதர்சன் (20), குவளக்குடி மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த மருதை மகன் ஜெய அயனந்த் (20) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் அவர்களிடம் இருந்து புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர்.

# வைகாசி விசாக திருவிழா: தூத்துக்குடிக்கு உள்ளூர் விடுமுறை



தூத்துக்குடி, மே.31

முருகப் பெருமானுக்குரிய முக்கியமான விழாக்களில் வைகாசி விசாகம் ஒன்று. வைகாசி மாதம் விசாகம்நட்சத்திரத்தன்று முருகப்பெருமான் அவதரித்த நட்சத்திரமாக கூறப்படுகிறது. விசாக நட்சத்திரத்தன்று முருகனை வழிபட்டால் ஆண்டு முழுவதும் வழிபட்ட பலன் கிடைக்கும் என நம்பப்படுகிறது.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வரும் ஜூன் 9ம் தேதி வைகாசி விசாக திருவிழா கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டத்துக்கு வருகிற 9ந்தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும் என அம்மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் அறிவித்துள்ளார்.

# பள்ளி மாணவர்களுக்கு பஸ் பாஸ்: தமிழக அரசு முக்கிய அறிவிப்பு



சென்னை, மே.31

போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

வருகிற (ஜூன்) 2ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டும், அதன் பின்னர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பல் தொழில்நுட்ப கல்லூரி, அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவை திறக்கப்பட உள்ளதை முன்னிட்டும், 202526 கல்வியாண்டில் மாணவர் / மாணவியர்களுக்கான கட்டணமில்லா புதிய பஸ் பயண அட்டை அவர்தம் கல்வி பயிலும் பள்ளி / கல்லூரியிலேயே அவர்களின் இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

அதற்குண்டான கால அளவினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் 202425ம் கல்வி ஆண்டிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பயண அட்டை, பள்ளி மாணவ/ மாணவியர்கள் சீருடை அல்லது பள்ளிகளில் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை நடத்துநரிடம் காண்பித்து தங்கள் இருப்பிடத்திலிருந்துதாம் பயிலும் பள்ளி வரையிலும் சென்று வருவதற்கு, அதே போன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரசு பல் தொழில்நுட்ப கல்லூரி, அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ/மாணவியர்கள் 202425 கல்வி ஆண்டில் வழங்கப்பட்ட கட்டணமில்லா பஸ் பயண அட்டை அல்லது தங்களது கல்வி நிறுவனத்தால் வழங்கிய அடையாள அட்டையை நடத்துநரிடம் காண்பித்து கட்டணமின்றி பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளி துவங்கும்/முடியும் நேரம் வரை பஸ்கள் சரியாக இயங்குவதை கண்காணித்திட அலுவலர்கள் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், உரிய பஸ் நிறுத்தத்தில் பஸ்களை நிறுத்தி மாணவ / மாணவியர்களை பாதுகாப்பாக ஏற்றி, இறக்கி செல்ல அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நடத்துநர் / ஓட்டுநர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வாக்காளர் அடையாள அட்டை போல் பேனர் வைத்த பக்தர்கள்... கோவில் திருவிழாவில் வினோதம்




திண்டுக்கல், மே.31

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே பொம்மனம்பட்டி கிராமத்தில் முத்தாலம்மன், காளியம்மன், பகவதி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் வைகாசி திருவிழா கடந்த 15ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவில் பக்தர்கள் மாவிளக்கு, அக்னி சட்டி, முளைப்பாரி எடுத்து தங்களது நேர்த்திகடனை செலுத்தினா்.

இந்த கோவில் திருவிழாவையொட்டி பக்தர்கள் பல்வேறு விதமாக பேனர்களை வைத்து இருந்தனர். அதில் பக்தர்கள் சார்பில் வாக்காளர் அடையாள அட்டைகளை வைத்து வினோத பேனர் ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அதில் முத்தாலம்மன், காளியம்மன், பகவதி அம்மன், நாகம்மாள், கன்னிமார், வெற்றி விநாயகர் ஆகிய தெய்வங்கள் இடம் பெற்று இருந்தனர். இந்த பேனரை விழாவுக்கு வந்த பக்தர்கள் ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.

கடந்த ஆண்டு திருவிழாவில் அம்மன் படம் வைத்து ஆதார் அடையாள அட்டை போல பக்தர்கள் பேனர் வைத்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 5 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஓட்டல் தொழிலாளிக்கு 7ஆண்டு சிறை



பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ 2 லட்சம் இழப்பீடாக வழங்கும்படி அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்

மதுரை, மே.31

மதுரையை சேர்ந்தவர் பழனிசாமி (வயது 70). ஓட்டல் தொழிலாளி. இவர் 2022ம் ஆண்டில் தனது வீட்டின் அருகே விளையாடிய 5 வயது சிறுமியை தன் வீட்டிற்கு அழைத்து வந்துள்ளார். அங்கு சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுகுறித்து சிறுமி, தனது பெற்றோரிடம் அழுதபடி கூறினார். அதன்பேரில் அவர்கள் இந்த சம்பவம் குறித்து தல்லாகுளம் போலீசில் புகார் அளித்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து பழனிசாமியை கைது செய்தனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட போக்சோ சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. அரசு வக்கீல் ஜான்சி ஆஜரானார்.

விசாரணை முடிவில், பழனிசாமி மீதான குற்றசாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 7 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி முத்துக்குமரவேல் தீர்ப்பளித்தார். மேலும்

# கடுகூரில் சேதமடைந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இடித்து அகற்றம்

அரியலூர் மே.31

அரியலூர் மாவட்டம், கடுகூர் கிராமத்தில் கருப்பண்ணசாமி கோவில் அருகே மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி உள்ளது. இந்த தொட்டியின் மூலம் அங்குள்ள வீடுகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இந்த குடிநீர் தொட்டி மிகவும் சிதிலமடைந்து காணப்பட்டதால், புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டித்தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள்கோரிக்கைவிடுத்தனர். அதன்பேரில், ரூ.9.91 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாகியும் சேதமடைந்த குடிநீர் தொட்டி இடிக்கப்படாமல் இருந்தது.



மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் சிமெண்டு பூச்சுகள் பெயர்ந்தும், தூண்களில் விரிசல் விழுந்தும், இரும்பு கம்பிகள் வெளியில் தெரிந்த நிலையிலும் இருந்தது. இதன் அருகே சிறுவர்கள் வழக்கமாக விளையாடி வரும் நிலையில், விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ளது என்று நேற்று முன்தினம் 'தினத்தந்தி' நாளிதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேற்று மதியம் 1 மணியளவில் சேதமடைந்த குடிநீர் தொட்டியைமுழுவதுமாக இடித்து அகற்றினர். இதன் காரணமாக விபத்து அபாயம் தடுக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதி பொது மக்கள் தெரிவித்தனர். மேலும் இதுதொடர்பாக செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும், துரித நடவடிக்கை மேற்கொண்ட அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு

விருதுநகர் மே.31

சாத்தூர் அருகே இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் அம்மனுக்கு சிறப்பு வழிபாடு நடத்தப்படும். அவ்வகையில் இன்று வெள்ளிக்கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு மஞ்சள், பால், பன்னீர், தேன் பல்வேறு வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு



அருள்பாலித்தார். இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். அதிகாலையிலேயே தென் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தியும், அக்னி சட்டி எடுத்தும், அலகு குத்தியும் வேண்டுதல்களை நிறைவேற்றினர். காலை முதலே பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மனை தரிசனம் செய்தனர்.

சிறப்பு பூஜைகளுக்கான ஏற்பாடுகளை கோவில் உதவி ஆணையர் இளங்கோவன் மற்றும் அறங்காவலர் குழு தலைவர் ராமமூர்த்தி தலைமையில் அறங்காவலர் குழுவினர் மற்றும் கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

# இந்த நெருக்கடி நிலையை நாங்கள் நிச்சயமாக கடந்து வருவோம் பா.ம.க. அருள்



விழுப்புரம் மே.31

பா.ம.க.வின்புத்தாண்டு சிறப்பு பொதுக்குழு கூட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28ந்தேதி நடைபெற்றது. இந்த கூட்டத்தில், தனது மகள் வழிப்பேரன் முகுந்தன் பரசுராமனை, பா.ம.க. இளைஞர் சங்கத் தலைவராக நியமித்து, பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிவித்தார். இதற்கு, பொதுக்குழு மேடையிலேயே, அன்புமணி ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் ராமதாஸ் அன்புமணி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இந்த சூழலில், கடந்த மாதம் 10ந்தேதி அன்புமணி ராமதாசின் தலைவர் பதவியை பறித்து ராமதாஸ் பரபரப்பு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அன்புமணி ராமதாஸ் செயல் தலைவராக தொடர்வார் என்றும் அறிவித்தார். அதேநேரம், கட்சியின் சட்ட விதிகள்படி நானேதலைவராக தொடர்வேன் என அன்புமணி ராமதாஸ் திட்டவட்டமாக தெரிவித்தார்.

சமீபத்தில், தருமபுரி மாவட்டம் கடத்தூரில் கடந்த 24ந் தேதி நடைபெற்றகூட்டத்தில்பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ், 'கட்சி பதவியில் இருந்து நான் ஏன் மாற்றப்பட்டேன். அப்படி நான் என்ன தவறு செய்தேன்' என மன வேதனையுடன் பேசினார். இந்த நிலையில், விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் நேற்று நிருபர்களை சந்தித்த பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், அன்புமணி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அன்புமணியை மத்திய மந்திரியாக்கி தவறு செய்துவிட்டதாக பரபரப்பு பேட்டி அளித்தார்.

தந்தைமகன் மோதலால் பா.ம.க.வுக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கிடையே சமரசம் ஏற்படுமா எனநிர்வாகிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இந்த நிலையில் ராமதாஸ் இல்லத்திற்கு வருகை தந்த பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே. மணி, எந்த கேள்விக்கும் பதில் சொல்ல முடியாத வகையில் பா.ம.க.வில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மன உளைச்சலிலும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத நெருக்கடியிலும் இருக்கிறேன் என்று கூறினார்.

அதே போல சேலம் தெற்கு தொகுதி பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் தனது கோரிக்கை மற்றும் முடிவை தெரிவிக்க ராமதாஸ் இல்லத்திற்கு வருகை தந்துள்ளார். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த அருள், "பா.ம.க. தொண்டர்கள் உச்சகட்ட மன உளைச்சல் மற்றும் மன வருத்தத்தில் இருக்கிறோம். அரசியலே வேண்டாம் என்னும் அளவிற்கு அவ்வளவு மன வேதனையாக இருக்கிறது. இந்த நெருக்கடி மற்றும் மோசமான நிலையை நாங்கள்நிச்சயமாக கடந்து வருவோம்" என்று கூறினார்.

# கல்வராயன்மலை; மலைப்பாதையில் தடுப்பு சுவர் உயர்த்தி அமைப்பு



கள்ளக்குறிச்சி, மே.31

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலை சுற்றுலாத்தலமாக உள்ளது. இங்கு பல நீர் வீழ்ச்சிகள் அமைந்துள்ளன. அதோடு மலை கிராமங்களும் உள்ளன. இவர்கள் பயன்படுத்தும் வகையில் மலையில் சாலை வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக அரசு பஸ்கள் மற்றும் வாகனங்களும் சென்று வருகின்றன.

இந்த நிலையில், கொடுந்துறை மேல்பரிகம் இடையே மலைப்பாதையில் சாலையோரம் அமைக்கப்பட்ட தடுப்பு சுவர், சில மாதங்களுக்கு முன்பு பெய்த கனமழையால் சரிந்து விழுந்தது. இதையடுத்து அப்பகுதியில் விபத்து ஏற்படாமல் இருப்பதற்காக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் சாலைஓரத்தில்தரைமட்ட அளவில் தடுப்பு சுவர் அமைத்து இருந்தனர். இது விபத்துக்கு வழிவகுக்கும் வகையில் இருந்தது.

இந்த தடுப்புச்சுவர் விபத்தை தடுக்கவா? அல்லது உயிரை எடுக்கவா? என வாகன ஓட்டிகள் புலம்பி வந்தனர். இது பற்றி 'தினத்தந்தி'யில் கடந்த 27ந்தேதி வெளியான இதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டு, தடுப்பு சுவரை உயர்த்தி கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து இருப்பதாக கூறப்பட்டு இருந்தது.

இதன் எதிரொலியாக, மாவட்ட கலெக்டர் பிரசாந்த் உத்தரவின் பேரில் நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் மணிமொழி மேற்பார்வையில் சாலை மட்டத்திற்கு இருந்த தடுப்பு சுவரை 2 அடி உயரத்துக்கு உயர்த்தி கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது இதற்கான பணியில் நெடுஞ்சாலைத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மலைப்பாதையை பயன்படுத்தி வரும் மலை கிராம மக்கள் உள்பட அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# திருநெல்வேலியில் 1 கிலோ கஞ்சா பறிமுதல்: வாலிபர் கைது

திருநெல்வேலி மே.31

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் ராஜேஷ் தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது தெற்கு கள்ளிகுளம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த கள்ளிகுளம், இ.பி. ஆபீஸ் தெருவை சேர்ந்த பூதலிங்கம் (வயது 31) என்பவரை சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய 1 கிலோ 50 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர், பூதலிங்கத்தை காவல் நிலையம் அழைத்து சென்றார். இது குறித்துவள்ளியூர்போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு பூதலிங்கத்தை நேற்று



கைது செய்து, அவரிடமிருந்து 1 கிலோ 50 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் போதை பழக்கத்தை குறைக்கும் நோக்கத்தோடு, திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினர் கஞ்சா, குட்கா போன்ற போதை பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது தனி கவனம் செலுத்தி தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இது போன்ற போதை பொருள்களை விற்பனை செய்பவர்கள் மீதும், வாங்குபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வலியுறுத்தியுள்ளார்.

# தூத்துக்குடி: பணியின்போது இறந்த காவல் அமைச்சுப்பணி அலுவலரின் வாரிசுக்கு அரசு பணியாணை எஸ்.பி. வழங்கல்

தூத்துக்குடி மே 31

தமிழ்நாடுசிறப்புகாவல் படை 8ம் அணியில் அலுவலக உதவியாளராக பணியாற்றிய தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த அருணாச்சலம் பணியிலிருக்கும்போது மரணமடைந்தார். அவரது மகள் ராதாவுக்கு கருணை அடிப்படையில் அரசு பணி வழங்க தமிழ்நாடு அரசுக்கு காவல்துறை மூலம் பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி ராதாவுக்கு வரவேற்பாளர் (Recepionist) பதவிக்கு தமிழ்நாடு அரசு பணி நியமனம் செய்துள்ளது. அதற்கான பணி நியமன ஆணையை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் ராதாவுக்கு வழங்கி பணி சிறக்க வாழ்த்தினார்.




# போக்குவரத்து தொழிலாளர்களுக்கு எதிரான தி.மு.க. அரசின் விரோதப் போக்கு கண்டனத்திற்குரியது: டி.டி.வி. தினகரன்

சென்னை, மே.31

ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கோரிய ஊதிய உயர்வை வழங்க வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தலைமையில் நேற்று நடைபெற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான 15வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை தி.மு.க கூட்டணி தொழிற்சங்கமான சி.ஐ.டி.யூ உட்பட 30க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள்புறக்கணித்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

15 முதல் 20 சதவீதம் வரை ஊதிய உயர்வு கோரிய தொழிற்சங்கத்தினருக்கு வெறும் 6 சதவீதம் மட்டுமே ஊதிய உயர்வு வழங்கியதோடு, ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 22 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் பணப்பலன் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசு தரப்பிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்காததே பேச்சுவார்த்தையை புறக்கணிக்க முக்கிய காரணமாகவும் அமைந்திருக்கிறது.



அதிலும், 01.09.2023 முதல் 6 சதவீதம் ஊதிய உயர்வு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிட்டிருக்கும்நிலையில், மொத்தமாக வழங்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையில் 12 மாத நிலுவைத் தொகையை வழங்க முடியாது எனவும் அமைச்சர் கூறியிருப்பது ஒட்டுமொத்த போக்குவரத்து தொழிலாளர்களையும் வஞ்சிக்கும் செயலாகும்.

பொதுமக்களுக்கு சேவை வழங்கும் நோக்கத்தில் தொடங்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்படும் நஷ்டத்தை காரணம் காட்டி, பண்டிகை காலங்களிலும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றும் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களை வழங்க மறுப்பது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கோரிய ஊதிய உயர்வை வழங்குவதோடு, ஓய்வூதியதாரர்களுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் பணப்பலன்களையும் உடனடியாக விடுவிக்க முன்வர வேண்டும் என போக்குவரத்துக் கழகத்தையும் தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நகைக்கடன் கட்டுப்பாடுகள் நீக்கம்: மக்களுக்கு கிடைத்த வெற்றி தங்கம் தென்னரசு



சென்னை, மே.31

நகைக் கடன்களுக்கான விதிகளை தளர்த்த ரிசர்வ் வங்கிக்கு மத்திய நிதியமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.


இந்த நிலை யில், இது தொடர்பாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது, தங்க நகைக்கடன் மீதான புதிய விதிமுறைகள் ஏழை மக்களுக்கு எதிரானவை. இந்த விதிகளை நிறுத்தி வைக்க மத்திய நிதியமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின்தொடர் முயற்சியின் விளைவாக மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. என தெரிவித்துள்ளார் .

# சென்னையில் ஜூன் 3ந் தேதி முதல் மின்சார பேருந்து சேவை: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்

சென்னை, மே.31

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் 5 பணிமனைகளில் இருந்து 625 மின்சார பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த வகையில், வியாசர்பாடி பணிமனையில் இருந்து 120 பேருந்துகள் இயக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு பேருந்துகளுக்கு சார்ஜ் செய்து கொள்ளும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை சமீபத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பார்வையிட்டார். இனி, வியாசர்பாடி பணிமனையில் மின்சார பேருந்துகள் மட்டும் நிறுத்தப்படும். இங்குள்ள டீசல் பேருந்துகள் வேறு பணிமனைகளுக்கு மாற்றப்பட உள்ளன.



இந்த நிலையில், புதிய மின்சார பேருந்துகள் ஜூன் 3ந் தேதி முதல் சென்னையில் இயக்கப்பட உள்ளன. இந்த பேருந்துகளை டெண்டர் எடுத்துள்ள நிறுவனமே இயக்கவும், பராமரிக்கவும் உள்ளது. டிக்கெட் கொடுக்கும் பணியில் அரசு நடத்துநர்கள் பணியாற்றுவார்கள். புதிய மின்சார பேருந்தில் கட்டணமும் வழக்கம் போலவே இருக்கும் என்று மாநகர போக்குவரத்து துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக 120 மின்சார பேருந்து சேவைகளை சென்னையில் ஜூன் 3ந் தேதி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கி வைக்கிறார். இந்த ஆண்டு இறுதிக்குள் 505 மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு வரும் என்று மாநகர போக்குவரத்து சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை மத்திய சிறைச்சாலை இடம் மாறுகிறது

மதுரை மே.31

மதுரை ஆரப்பாளையத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. தற்போது நகரம் விரிவடைந்து வருவதால், சிறைச்சாலை இங்கு செயல்படுவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. மேலும் சிறைச்சாலையில்கைதிகளுக்கும் போதிய இடவசதி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ரூ.336 கோடி மதிப்பில் மேலூர் அருகே புதியமத்தியசிறைச்சாலையை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கான டெண்டர் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து மதுரை




மத்திய சிறைச்சாலை ஆரப்பாளையத்தில் இருந்து மேலூருக்கு இடம்மாற உள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

31.5.2025

## தனியார் மருத்துவமனையில் 'ஸ்கேன்' எடுக்க வந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை ஊழியர் கைது



சென்னை மே.31

சென்னை அருகே செங்குன்றத்தை அடுத்த விளாங்காடுபாக்கம் பகுதியை சேர்ந்த இளம் பெண் ஒருவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதனால் அவர் பாடியநல்லூர் சுங்கச்சாவடி அருகே உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற சென்றார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள், சி.டி. 'ஸ்கேன்' எடுக்க வேண்டும் என கூறியதால் அந்த அறைக்குள் சென்றார்.

அப்போது அங்கிருந்த ஊழியர், இளம்பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. அதிர்ச்சி அடைந்த இளம் பெண் அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார். இதுகுறித்து சோழவரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிளாட்சன் வழக்குப் பதிவு செய்து செங்குன்றத்தை அடுத்த வழுதிகம்பேடு பகுதியைச் சேர்ந்த மருத்துவமனை ஊழியர் ராஜ்குமார் (32 வயது) என்பவரை கைது செய்து விசாரித்து வருகிறார்.

## குற்றாலம் அருவிகளில் குளிக்க 6ஆவது நாளாக தடை: சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

நெல்லை, மே.31

கேரளாவில் தென் மேற்கு பருவமழை தொடங்கி தீவிரமாக பெய்து வருகிறது. தமிழகத்திலும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.இதன் காரணமாக நெல்லை, தென்காசி மாவட்டங்களில் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து, நீர்மட்டமும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.தென்காசி மாவட்டத்திற்கு நேற்று கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் கொடுக்கப்பட்டது.

இதனால் காலை முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. நகர பகுதியிலும் மதியம் கனமழை பெய்தது. பல்வேறு இடங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த 5 நாட்களாக குற்றாலம் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. நேற்று குற்றாலம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மீண்டும் கனமழை பெய்தது. தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால்

குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலியருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டி வருகிறது. பாதுகாப்பு கருதி அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க 6வது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

## இன்றைய ராசி பலன்கள் (31.5.2025)

**மேஷம்** — நலம்: நல்ல முன்னேற்றம், புதிய வாய்ப்புகள் குறிப்பு: உற்சாகமாக செயல்படுங்கள். பரிகாரம்: அனுமன் வழிபாடு நல்லது.

**ரிஷபம்** — நலம்: நிதானமான நாள், பயண சாதகங்களை குறிப்பு: செலவுகளை கட்டுப்படுத்தவும். பரிகாரம்: தேவிவழிபாடு பயனளிக்கும்.

**மிதுனம்** — நலம்: புகழ், வாய்ப்புகள் கிடைக்கும் குறிப்பு: புதிய முயற்சிகளில் வெற்றி. பரிகாரம்: விஷ்ணு ஸ்லோகங்களை சொல்லுங்கள்.

**கடகம்** — நலம்: குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவுகளில் நம்பிக்கை குறிப்பு: பழைய பிரச்சனைகள் தீரும். பரிகாரம்: சந்திரனுக்கு தீபம் ஏற்றவும்.

**சிம்மம்** — நலம்: அதிகாரிகளில் ஆதரவு, பண வரவு குறிப்பு: சுய நம்பிக்கையுடன் இருங்கள். பரிகாரம்: சூரியனை வணங்குங்கள்.

**கன்னி** — நலம்: மனநிம்மதி, சிறு அளவில் லாபம் குறிப்பு: பழைய நண்பர்களை சந்திக்கலாம். பரிகாரம்: திருவெம்பாவை பாடவும்.

**துலாம்** — நலம்: தொழிலில் வளர்ச்சி, புதிய திட்டங்கள் குறிப்பு: கோபத்தைக் கட்டுப்படுத்தவும். பரிகாரம்: மகாலட்சுமி பூஜை நல்லது.

**விருச்சிகம்** — நலம்: சுப நிகழ்வுகள், நல்ல சிந்தனைகள் குறிப்பு: உறவுகளில் நம்பிக்கை வைக்கவும். பரிகாரம்: ஸ்ரீ ருத்ரம் பாராயணம்.

**தனுசு** — நலம்: சோர்வு குறைவு வாய்ப்பு, நட்பு வட்டம் விரிவாகும் குறிப்பு: நிதானமாக செயல்பட வேண்டும். பரிகாரம்: துர்கை அம்மன் அர்ச்சனை செய்யவும்.

**மகரம்** — நலம்: பணவரவு, குடும்ப மகிழ்ச்சி குறிப்பு: திட்டமிட்டு செலவிடுங்கள். பரிகாரம்: சனீஸ்வரன் வழிபாடு மிகவும் உகந்தது.

**கும்பம்** — நலம்: தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு வாய்ப்பு குறிப்பு: மற்றவர்களிடம் நம்பிக்கையை வைக்க வேண்டும். பரிகாரம்: நவகிரஹ பூஜை செய்யவும்.

**மீனம்** — நலம்: ஆரோக்கியம் மேம்படும், மனதில் நிம்மதி குறிப்பு: குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு சிறந்தது.

## கொச்சியில் சரக்கு கப்பல் கடலில் மூழ்கிய சம்பவம்: குமரி கடற்கரையில் ஒதுங்கிய கன்டெய்னர்



கொச்சி, மே.31

கொச்சியில் சரக்கு கப்பல் கடலில் மூழ்கிய நிலையில் குளச்சல் அருகே வாணியக்குடி கடற்கரையில் கன்டெய்னர் கரை ஒதுங்கியது.

கேரள மாநிலம் விழிஞ்ஞம் துறைமுகத்தில் இருந்து கொச்சி துறைமுகத்திற்கு புறப்பட்ட லைபீரியா நாட்டு சரக்கு கப்பல் கடந்த 24ந் தேதி ஆழ்கடலில் மூழ்கியது. அதில் கால்சியம் கார்பனேட், முந்திரி கொட்டை, பிளாஸ்டிக் மூலப்பொருள்கள் உள்பட பல்வேறு பொருட்கள் 640 கன்டெய்னர்களில் இருந்தன. மூழ்கிய கப்பலில் இருந்து பல கன்டெய்னர்கள் மீட்கப்பட்டன. சில கன்டெய்னர்கள் கேரள கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கின.கப்பல் மூழ்கி 6 நாட்கள் கடந்த நிலையில் கடல் நீரோட்டத்தில் சில பொருட்கள் கேரள கடல் பகுதியில் இருந்து குமரி கடல் பகுதிக்கு வந்த வண்ணம் உள்ளது.

இந்தநிலையில் நேற்று குளச்சல் அருகே வாணியக்குடி கடலில் ஒரு கன்டெய்னர் கரை ஒதுங்கியது. இதை பார்த்த மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் வாணியக்குடி, மண்டைக்காடு, சின்னவிளை, கடியப்பட்டணம் போன்ற கடற்கரைகளில் பிளாஸ்டிக் சாக்கு மூடைகள் கரை ஒதுங்கின. அந்த மூடைகளில் இருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் மூலப் பொருட்கள், முந்திரி கொட்டை போன்றவை அலையில் கரை ஒதுங்கிய நிலையில் சிதறி கிடந்தன. இதனை அறிந்த மீனவர்கள் கடற்கரையில் திரண்டனர்.

தகவல் அறிந்து கலெக்டர் அழகு மீனா மற்றும் வருவாய் துறையினர் கடற்கரைக்கு வந்து கன்டெய்னர் மற்றும் சாக்கு மூடைகளை பார்வையிட்டனர். குமரி கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கிய பிளாஸ்டிக் மூலப்பொருட்களை கடற்கரையில் இருந்து அகற்றுவதற்காக குஜராத்தில் இருந்து குழுவினர் வர உள்ளனர். அவர்கள் வந்து தங்களது பணியை தொடங்கும் வரை பொதுமக்கள் யாரும் பிளாஸ்டிக் மூடைகள் மற்றும் உதிர்ந்து கிடக்கும் பிளாஸ்டிக் மூலப் பொருளின் அருகில் செல்ல வேண்டாம் என கலெக்டர் அழகுமீனா எச்சரித்துள்ளார்.

## சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட ரூ.5 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல்



சென்னை மே.31

தாய்லாந்து நாட்டிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட ரூ.5 கோடி மதிப்புள்ள 5 கிலோ உயர் ரக ஹைட்ரோபோனிக் கஞ்சா போதைப்பொருளை சென்னை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மோப்ப நாய் உதவியுடன் இந்த போதைப்பொருளை அதிகாரிகள் கண்டறிந்தனர். மேலும் போதைப்பொருளை கடத்தி வந்த நபரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை விமான நிலையத்தில் அடுத்தடுத்து 2 தினங்களில் ரூ.6 கோடி மதிப்புடைய 6 கிலோ ஹைட்ரோபோனிக் கஞ்சா போதைப் பொருள் மோப்ப நாய் உதவியுடன் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## த.வெ.க. கல்வி விருது வழங்கும் விழா தொடங்கியது

சென்னை மே.31

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கல்வி ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் கடந்த 2 ஆண்டுகளாக 10, 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி கவுரவித்து வருகிறார். விஜய்யின் இந்த திட்டம் மாணவ, மாணவிகளிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு கல்வி ஆர்வத்தை தூண்டி வருகிறது.

விஜய் கையினால் பரிசு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாணவ, மாணவிகள் பலர் நன்றாக படித்து அதிக மதிப்பெண் பெற்று வருகின்றனர். இந்த நிலையில் 2025ம் ஆண்டு கல்வி விருது வழங்கும் விழா மாமல்லபுரத்தில் உள்ள 4 பாயிண்ட்ஸ் ஷெரட்டன் ஓட்டலில் இன்று நடக்கிறது. பரிசளிப்புவிழாவில் சென்னை, அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், சிவகங்கை, செங்கல்பட்டு, திண்டுக்கல், திருவள்ளூர், தேனி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை பெரம்பலூர், வேலூர் மாவட்டங்களுக்கு உள்பட்ட 88 தொகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் 600 பேர் பங்கேற்றுள்ளனர்.

10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 3 இடத்தை பிடித்த மாணவ, மாணவிகளும், மாநில அளவில் முதலிடத்தை பெற்ற மாணவ, மாணவிகளும் மற்றும் அதிக மதிப்பெண் பெற்ற மாற்றுத்திறனாளிகள், வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மாணவ, மாணவிகளும் தங்களது பெற்றோருடன் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில் கல்வி விருது வழங்கும் விழா தற்போது தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியுள்ளது. த.வெ.க. தலைவர் விஜய் மாணவர்களுடன் முதல் வரிசையில் அமர்ந்துள்ளார். இந்த விழாவில் மாணவமாணவிகளின் கல்வி ஆர்வத்தை ஊக்கப்படுத்தி த.வெ.க. தலைவர் விஜய் சிறப்புரையாற்றுகிறார். இதைத் தொடர்ந்து மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கடந்த ஆண்டை போல் இந்த ஆண்டும் வைரக் கம்மல் அல்லது வைர மோதிரம் பரிசு வழங்கி விஜய் கவுரவிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

அடுத்ததாக தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தங்க நாணயம், கல்வி ஊக்கத் தொகை, விருதுகளை வழங்கி மாணவ, மாணவிகளுடன் விஜய் புகைப்படம் எடுத்துக் கொள்கிறார். பரிசு பெற இருக்கும் 600 மாணவ, மாணவிகளுக்கும் விஜய் நேரில் பரிசு வழங்கி உற்சாகப்படுத்த இருக்கிறார். விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் மதியம் 21 வகையான அறுசுவை உணவுகள் வழங்கப்பட இருக்கிறது. 2ம் கட்ட பரிசளிப்பு விழா அடுத்த வாரமும், 3ம் கட்ட பரிசளிப்பு விழா அதற்கடுத்த வாரமும் நடக்கிறது.

## "சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்" படத்தின் "ஓ மெரி ஜான்" வீடியோ பாடல் வெளியீடு




சென்னை 28, சரோஜா, கோவா படங்களில் நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்தவர் வைபவ். பின்னர், 'கப்பல், மேயாத மான்' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'பெருசு' என்ற படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதைதொடர்ந்துநடிகர்வைபவ்,'சென்னைசிட்டிகேங்ஸ்டர்ஸ்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை விக்ரம் ராஜேஷ்வர் மற்றும் அருண் கேசவ் இணைந்து இயக்கியுள்ளனர். இப்படத்தில் அதுல்யா ரவி கதாநாயகியாக நடித்துள்ளார். நகைச்சுவைபடமாகஉருவாகிஉள்ளஇதில்மொட்டராஜேந்திரன், ஜான் விஜய், ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, ஆனந்த் ராஜ், இளவரசு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.முழுக்க முழுக்க காமெடி நிறைந்த இப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல் சமீபத்தில் வெளியாகி வைரலாகின. இப்படம் வருகிற ஜூன் 20ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானது. இந்நிலையில் 'சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்' படத்தின் பாடலான ஓ மெரி ஜான் பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

## ஆசிய தடகள போட்டி: தங்கம் வென்ற இந்திய வீரர் குல்வீர் சிங்



26வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவில் உள்ள குமி நகரில் நடந்து வருகிறது. இதில் 43 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயம் இன்று நடைபெற்றது. இதில் இந்திய வீரர் குல்வீர் சிங் கலந்து கொண்டு முதல் இடத்தைப் பிடித்தார். அவர் பந்தய தூரத்தை 13:24.78 என்ற நேரத்தில் கடந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

## அறிமுக வீரரை வாட்டர் பாய் என ஸ்லெட்ஜிங் செய்த விராட்..? சமூக வலைதளங்களில் விமர்சனம்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் நேற்று இரவு நடந்த இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றில் புள்ளி பட்டியலில் முதலிடம் பிடித்த பஞ்சாப் கிங்ஸ், 2வது இடம் பெற்ற ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை எதிர்கொண்டது. இதில் டாஸ் வென்ற பெங்களூரு அணியின் கேப்டன் ரஜத் படிதார் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி, பெங்களூரு வீரர்களின் அபார பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் வெறும் 14.1 ஓவர்களில் 101 ரன்னில் சுருண்டது. அதிகபட்சமாக ஸ்டோய்னிஸ் 26 ரன்கள் அடித்தார். பெங்களூரு அணி தரப்பில் ஹேசில்வுட், சுயாஷ் ஷர்மா தலா 3 விக்கெட்டுகளும், யாஷ் தயாள் 2 விக்கெட்டுகளும், புவனேஷ்வர் குமார், ரொமாரியோ ஷெப்பர்டு தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதனையடுத்து 102 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பெங்களூரு அணி 10 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 106 ரன் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. பில் சால்ட் 56 ரன்களுடனும், ரஜத் படிதார் 15 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். பெங்களூரு சுழற்பந்து வீச்சாளர் சுயாஷ் ஷர்மா ஆட்டநாயகன் விருது பெற்றார். இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணியில் 20 வயதான முஷீர் கான் அறிமுக வீரராக களமிறங்கினார். இருப்பினும் 3 பந்துகளை எதிர்கொண்ட அவர் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். முன்னதாக அவர் பேட்டிங் செய்ய வந்தபோது ஸ்லீப் பகுதியில் பீல்டிங் நின்ற விராட் கோலி, முஷீர் கானை 'வாட்டர் பாய்' என்று ஸ்லெட்ஜிங் செய்ததாக சமூக வலைதளங்களில் ஒரு வீடியோ வைரலாகி வருகிறது. இருப்பினும் அந்த வீடியோவின் உண்மை தன்மை குறித்து தெரியவில்லை. ஆனாலும் பல ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன. இதனை கண்ட ரசிகர்கள் பலர் இப்படி ஒரு ஜாம்பவான் வீரர் அறிமுக வீரரை ஸ்லெட்ஜிங் செய்வது மிகவும் தவறானது என்று விராட் கோலியை விமர்சித்து வருகின்றனர். இந்த போட்டியில் முஷீர் கான் பேட்டிங் செய்ய களமிறங்குவதற்கு சில ஓவர்களுக்கு முன் பெவிலியனில் இருந்து களத்தில் இருந்த சக வீரர்களுக்கு தண்ணீர் கொண்டு வந்தார். இதனை குறிப்பிட்டு விராட் கோலி கிண்டலடித்ததாக ரசிகர்கள் விமர்சித்து வருகின்றனர்.

## தெலுங்கானா அரசின் கத்தார் திரைப்பட விருதுக்கு பாகுபலி, ஆர்ஆர்ஆர் படங்கள் தேர்வு




விருது தேர்வு நடுவர் குழுவிற்கு தலைமை தாங்கிய மூத்த நடிகரும் தயாரிப்பாளருமான முரளி மோகன் விருது பெற்ற வெற்றியாளர்களின் பெயர்களை அறிவித்தார்.2014ம் ஆண்டு மாநிலப் பிரிவினைக்குப் பிறகு, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேச அரசுகள் மதிப்புமிக்க நந்தி திரைப்பட விருதுகளை வழங்குவதை நிறுத்திவிட்டதாக முரளி மோகன் கூறினார். நாட்டுப்புறப் பாடகரும், நடனக் கலைஞருமான 'கத்தார்' அவர்களின் பெயரைச் சூட்டி திரைப்பட விருதுகளை வழங்குவதற்கான முடிவிற்குமுதலமைச்சர்ஏ.ரேவந்த்ரெட்டியைமுரளிமோகன்பாராட்டினார்.

பிரபல திரைப்பட இயக்குனர் எஸ்.எஸ். ராஜமவுலியின் 'பாகுபலி2' மற்றும் 'ஆர்ஆர்ஆர்' ஆகியவை தெலுங்கானா அரசின்2014முதல்2023வரையிலானஆண்டுகளுக்கானகத்தார்திரைப்படவிருதுகளுக்கானதேர்வுகளில்இடம்பெற்றன.

பைடி ஜெய்ராஜ் திரைப்பட விருதுக்கு இயக்குனர் மணிரத்னம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக முரளி மோகன் தெரிவித்தார். தெலுங்கானாவைச் சேர்ந்த பைடி ஜெய்ராஜ், பாலிவுட்டில் மூத்த நடிகராகவும் இயக்குநராகவும் இருந்தவர், அவர் மதிப்புமிக்க தாதாசாகேப் பால்கே விருதையும் பெற்றார்.

என்.டி.ஆர் தேசிய திரைப்பட விருதுக்கு நடிகர் பாலகிருஷ்ணா தேர்வு செய்யப்பட்டுள்ளார். பாலகிருஷ்ணா பழம்பெரும் என்.டி.ராமராவின் மகன் ஆவார்.

'புஷ்பா' பட இயக்குனர் சுகுமார் பி என் ரெட்டி திரைப்பட விருதை பெற்றார்.

நாகிரெட்டி மற்றும் சக்ரபாணி திரைப்பட விருதுக்குமூத்த திரைப்பட தயாரிப்பாளர் அட்லூரி பூர்ணச்சந்திர ராவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

'காந்த ராவ்' திரைப்பட விருதை இளம் ஹீரோ விஜய் தேவரகொண்டா வென்றார். 'கல்கி 2898 ஏடி' சிறந்த திரைப்பட விருதை வென்றுள்ளது. பிரபல தெலுங்கு எழுத்தாளர் மற்றும் நாவலாசிரியர் 'யண்டமூரி வீரேந்திரநாத்' ரகுபதி வெங்கையா திரைப்பட விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2014 ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'ரன் ராஜா ரன்', 'பதசாலா' மற்றும் 'அல்லுடு ஸ்ரீனு' 2015 ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'ருத்ரமா தேவி', 'கஞ்சே' மற்றும் 'ஸ்ரீமந்துடு' 2016ம் ஆண்டுக்கான சிறந்த படங்கள் 'சதமனம் பவதி', 'பெள்ளி சுப்புலு' மற்றும் 'ஜனதா கேரேஜ்' 2017ம் ஆண்டுக்கான சிறந்த படங்கள் 'பாகுபலி', 'கன்க்ளூஷன் பிடா' மற்றும் 'காஜி' 2018 ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'மகாநதி', 'ரங்கஸ்தலம்' மற்றும் 'சி/ஓ காஞ்சேரபாலம்' 2019ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'மஹர்ஷி'', 'ஜெர்சி' மற்றும் 'மல்லேஷம்' 2020ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'ஆலா வைகுண்டபுரமுலோ', 'கலர் போட்டோ' மற்றும் 'மிடில் கிளாஸ் மெலடிஸ்' 2021ம் ஆண்டிற்கானசிறந்தபடங்கள் 'ஆர்ஆர்ஆர்','அகண்டா' மற்றும் 'உப்பெனா' 2022ம் ஆண்டிற்கானசிறந்தபடங்கள் 'சீதாராமம்', 'கார்த்திகேயா2' மற்றும் 'மேஜர்' 2023ம் ஆண்டிற்கான சிறந்த படங்கள் 'பாலகம்', 'ஹனு மன்' மற்றும் 'பகவந்த கேசரி'

புஷ்பா 2' படத்தில் நடித்ததற்காக சிறந்த தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த விருதை அறிவித்ததற்காக அல்லு அர்ஜுன் அரசுக்கு நன்றி தெரிவித்தார். 'புஷ்பா 2' படத்திற்காக சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றதில் நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். இந்த மதிப்புமிக்க கவுரவத்திற்காக தெலுங்கானா அரசுக்கு மனமார்ந்த நன்றி. அனைத்துப் புகழும் எனது இயக்குனர் சுகுமார், மற்றும் எனது தயாரிப்பாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த புஷ்பா குழுவினருக்கே சேரும். இந்த விருதை எனது அனைத்து ரசிகர்களுக்கும் அர்ப்பணிக்கிறேன், உங்கள் அசைக்க முடியாத ஆதரவு எனக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது." என கூறியுள்ளார்.

தெலுங்கானா உருவான பிறகு வழங்கப்படும் முதல் அதிகாரபூர்வ மாநில அளவிலான திரைப்பட விருது இதுவாகும். தெலுங்கு சினிமாவை மேம்படுத்துவதற்காக நந்தி விருதுகள் மீண்டும் நடத்தப்படும் என்றும், 202ல் காலமான புரட்சிகர கவிஞரும் பாடலாசிரியருமான கும்மாடி விட்டல் ராவ் எனப்படும் கத்தார் நினைவாக நந்தி விருதுகள் மீண்டும் வழங்கப்படும் என்றும் முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி கடந்த ஆண்டு அறிவித்திருந்தார்.

## நான் சிறந்த பேட்ஸ்மேனாக மாற விராட் கோலிதான் காரணம் ஜேக்கப் பெத்தேல்

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்படி இங்கிலாந்து வெஸ்ட் இண்டீஸ் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதனை தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 400 ரன்கள் குவித்து அசத்தியது. இங்கிலாந்து தரப்பில் ஜேக்கப் பெத்தேல் (82 ரன்கள்), பென் டக்கெட் (60 ரன்கள்), ஹாரி புரூக் (58 ரன்கள்) மற்றும் ஜோ ரூட் (57 ரன்கள்) ஆகிய 4 வீரர்கள் அரைசதம் அடித்து அசத்தினர். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் 401 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுகளை இழந்து ஆல் அவுட் ஆனது. வெறும் 26.2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் 162 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனால் 238 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி இங்கிலாந்து தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்த போட்டியின் ஆட்டநாயகனாக ஜேக்கப் பெத்தேல் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் தான் முன்பு இருந்ததை விட சிறந்த பேட்ஸ்மேனாக மாற விராட் கோலியின் ஆலோசனை உதவியதாக ஜேக்கப் பெத்தேல் தெரிவித்துள்ளார். இருவரும் ஐ.பி.எல். தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியில் ஒன்றாக விளையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. மிடில் ஆர்டரில் பேட்டிங் செய்வது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் வலுவான நிலையில் இருந்ததால் இன்று நான் பேட்டிங் செய்ய வந்தபோது எளிதாக இருந்தது. நிறைய டாட் பால்களை எதிர்கொள்வது ஒரு பேட்ஸ்மேனின் மனதிற்கு நல்லதல்ல. ஆரம்பத்திலேயே சில பவுண்டரிகள் அடிப்பது சரியானது. ஐ.பி.எல். தொடரில் விளையாடிய அனுபவம் பயனைக் கொடுத்தது. ஐ.பி.எல். தொடரில் விளையாட செல்வதற்கு முன்பிருந்ததை விட தற்போது நான் முன்னேறிய பேட்ஸ்மேனாக இருக்கிறேன். அதற்கு விராட் கோலிதான் காரணம். அவர் தன்னுடைய அனுபவங்களையும் பேட்டிங் நுணுக்கங்களையும் பகிர்ந்தார்" என்று கூறினார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.